



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 38.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குளிரூட்டப்பட்ட நூலகமாக புதுப்பிக்கப்பட்ட மெரினா கிளை நூலகத்தை நேற்று (16.4.2025) திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்தர மோகன், பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், சென்னை மாநகர நூலக ஆணைக்குழுத் தலைவர் கவிஞர் மனுஷ்யபுத்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பேச்சிப்பாறை – பெருஞ்சாணி அணையிலிருந்து வரும் கால்வாய்கள் சீரமைப்பு :

# திட்ட அறிக்கை கிடைத்தவுடன் நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – கவன ஈர்ப்பில் அமைச்சர் துரைமுருகன் உறுதி!

**சென்னை, ஏப். 17 -**

**கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணை களிலிருந்து வருகின்ற கோதையாறு வடிநிலத்திற்குட்பட்ட கால்வாய் களை சீரமைப்பது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை - விரிவான மதிப்பீடு பெறப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் பேசுகையில் உறுதிபடத் தெரிவித்தார்.**



சட்டப்பேரவையில் நேற்று, கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளிலிருந்து வருகின்ற கால்வாய்களை சீரமைப்பது குறித்த சிறப்பு கவன ஈர்ப்பு கொண்டு வந்து காங்கிரஸ் செ.ராஜேஷ்குமார், அ.தி.மு.க. ந.தளவாய்சுந்தரம் ஆகியோர் கொண்டு வந்து பேசினார்.

இதற்கு பதிலளித்து நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:-

விவர அறிக்கை ஒன்று உறுப்பினரின் மேஜையின் மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

விவர அறிக்கையில், "கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து வருகின்ற கோதையாறு வடிநிலத்திற்குட்பட்ட கால்வாய்களை சீரமைப்பது தொடர்பாக, WAPCOS நிறுவனம்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,085.062 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை மற்றும் விரிவான மதிப்பீடு பெறப்பட்டவுடன் உரிய ஒப்புதல் மற்றும் நிதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்." என்று விவர அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தது.

Lift irrigation வந்துவிட்டது என்பது அர்த்தமல்ல. எல்லோர் தொகுதிக்கும் எல்லோரும் கேட்பதுதான். அவர் எவ்வளவு நாள் கேட்டு, எவ்வளவு நாள் செய்யாமல் இருந்தது பயந்துகொண்டு தோவாளையிலிருந்து போட வேண்டும் என்றார். ஒரு விஷயத்தை வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் இரண்டு பேரும் பேசியது மட்டுமல்ல, உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த இங்கு உட்கார்ந்து இருப்பவர் களுக்கும் சேர்த்தே நான் சொல்கிறேன். உங்களுடைய கோபத்தோடும், வேகத்தோடும் நீங்கள் பேசினால்கூட, அதை நான் ஒத்துக் கொள்வேன். காரணம், நாஞ்சில் நாடு முழுக்க, முழுக்க விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற ஒன்று. வேறு எந்த தொழிற்சாலையும் கிடையாது. காலமெல்லாம் செய்தாக வேண்டும்.

ஆகையினால்தான் அந்த மாவட்டத்திலே, நண்பர் சொன்னதைபோல, நீங்கள் சொன்னதை போல, ஆறுகள், குளங்கள் இருக்கும். மனிதனுடைய நரம்பு மண்டலத்தில் ஓடுவதைபோல, ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். ஆனால், அந்த ஆறுகள் எல்லாம் இப்போது வந்த பெருமழையால் கரைகளெல்லாம் உடைந்து போக முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக நாங்கள் எல்லாவற்றையும் சேர்த்து அவைகளை சீர்செய்ய வேண்டு மென்பதற்காகத்தான் DPR தயாரிக்க இரண்டு, மூன்று கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். அதனுடைய result இன்னும் வரவில்லை. தேர்தலுக்கு முன்பே, தலைவரிடத்திலே பேசினேன். இது நீண்ட நாட்களாக இருக்கின்ற பிரச்சினை. நாம் தனிக்கவனம் செலுத்தி, தனி நிதி ஒதுக்கி நாஞ்சில் நாட்டைக் காப்பாற்றாவிட்டால் அது வேறெங்கோ போய்விடும் என்ற நிலைமையைத் தெரிவித்திருக்கிறேன்.

எனவே, நான் சொல்வது இதுதான். மறுபடி விளக்கமாக நான் சொல்ல தேவையில்லை. உங்களுக்கு எல்லாவற்றையும் எடுத்து நேரடியாக இப்போது மொத்தமாக 96 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகிறது. 2024 ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை பெய்த காரணத்தால் 26 இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்பகுதியை தற்காலிகமாக அமைத்திருக்கிறோம். மற்ற 26 இடங்களில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் ஒதுக்குவதற்காக, பெரும்பணிக்காகத்தான் நீங்களே சொன்னதைப்போல 1,866 கோடி ரூபாய் உத்தேசமாக போட்டிருக்கிறார்கள். இது போதுமானதாக இருக்காது. இதற்குமேல்தான் போகும். எனவே, இந்த அவையிலே நான் உங்களுக்கு சொல்கிறேன், விரைவில் DPR report வாங்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கவன ஈர்ப்பிற்கு பதிலளித்து பேசினார்.




தலைமைச் செயலகத்தில் நேற்று (16.04.2025) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்ரர் ஆர்.காந்தி தலைமையில் 2025–2026 நிதியாண்டின் சட்டமன்ற அறிவிப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும், 2026 பொங்கல் திருநாளில் வேட்டி சேலை வழங்கும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் துறை சார்ந்த திட்டங்களின்பணி முன்னேற்றம் குறித்து, அலுவர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்தறி துறை இயக்குநர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், துணிநூல் துறை இயக்குநர் திருமதி இரா. லலிதா மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


